### ஆந்திராவில் செம்மரம் வெட்ட வந்ததாக சுட்டுக்கொல்லப்பட்ட

# ஜவ்வாதுமலை தொழிலாளி சடலத்தை டோலியில் எடுத்துச்சென்ற அவலம்





▶ திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் உள்ள காணமலைக்கு ஆம்புலன்ஸ் செல்ல வழி இல்லாததால் தொழிலாளி சடலத்தை டோலி மூலம் எடுத்து சென்றனர். அடுத்த படம்: அஞ்சலிக்காக வீட்டில் வைக்கப்பட்டு இருந்த காமராஜின் சடலத்தை பார்த்து அவரது மனைவி, மகன்கள், மகள் மற்றும் உறவினர்கள் கதறி அழுதனர்.

## சாலை வசதி இல்லாததால் நடுவழியில் நின்ற ஆம்புலன்ஸ்

**வேலூர், செப். 19:** சித்தூர் மாவட்டம், ஸ்ரீகாளஹஸ்தி அடுத்த கொல்லப்பல்லி என்ற வனப்பகுதியில் செம்மரம் வெட்ட வந்ததாக கூறி திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் உள்ள காணமலை கிராமத்தை சேர்ந்த காமராஜ் என்பவரை கடப்பா வனத்துறை அதிகாரிகள் கடந்த 31ம் தேதி சுட்டுக்கொன்றனர்.

இந்த கொலையில் சந்தேகம் இருப்பதாகவும் மறு பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் மக்கள் கண்காணிப்பகம் சார்பில் உறவினர்கள் ஆந்திர மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இதைத்தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுபடி ஸ்ரீகாளஹஸ்தி அரசு மருத்துவமனையில் காமராஜின் சடலம் நேற்றுமுன்தினம் மறு உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டது.

இதையடுத்து காமராஜின் சடலம் சொந்த ஊரான திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலை அடுத்த காணமலைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் காணமலை கிராமத்துக்கு மலைப்பாதை வழியாக செல்ல வேண்டிய நிலையில், சாலை வசதியில்லாததால் 5 கிலோமீட்டர் தூரத்திற்கு முன்னதாகவே ஆம்புலன்ஸ் நின்றுவிட்டது. இதையடுத்து இரவு 10 மணிக்கு மேல், காமராஜ் உறவினர்கள் மற்றும் கிராம மக்கள் டோலி கட்டி சடலத்தை கிராமத்திற்கு தூக்கிச் சென்றனர். அப்போது போளூர் தாசில்தார் தியாகராஜன், கலசபாக்கம் இன்ஸ்பெக்டர் ராஜகோபால் உடனிருந்தனர்.

இதற்கிடையே நேற்று காலை காமராஜின் சடலம் அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அப்போது காமராஜின் மனைவி காமாட்சி, மகன்கள், மகள், உறவினர்கள் மற்றும் கிராமத்தினர் கதறி அழுதனர். பின்னர் மாலையில் இறுதிச்சடங்கு நடந்தது.

ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் சடலத்தை தோளில் சுமந்து செல்லும் சம்பவங்கள் வடமாநிலங்களில்தான் நடந்து வந்தது. ஆனால் வளர்ந்த மாநிலம் என கூறப்படும் தமிழகத்திலும் சாலை வசதி இல்லாததால் சடலத்தை டோலியில் சுமந்து செல்லும் அவல நிலை ஏற்பட்டது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

### செம்மரம் வெட்டியதாக கூறுவது பொய்

இதுதொடர்பாக, சுட்டுக்கொல்லப்பட்ட காமராஜின் மகன் ராமராஜ் கூறியதாவது:

எனது தந்தை செம்மரம் வெட்டியதாக ஆந்திர போலீசார் கூறுவது பொய்யான தகவல். கட்டிட வேலைக்கு சென்றவரை சந்தேகத்தின் பேரில் பிடித்துச் சென்று துன்புறுத்தி கொன்றுள்ளனர். அதன்பிறகு, துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இது திட்டமிட்ட படுகொலை. எங்களுடைய குடும்பத்துக்கு ஆந்திர அரசும், தமிழக அரசும் இழப்பீடு வழங்க வேண்டும். முறையான விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.